ISSN: 2582–5518




புதுகை
# வரலாறு
நாளிதழ்
WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




புதன் ❖ ஆகஸ்ட். 30, 2023 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 327 ❖ ரூ.10

## வீட்டு உபயோக சிலிண்டர் விலை ரூ.200 குறைப்பு; மத்திய அரசு

# அறிவிப்பு

## பிரதமர் தலைமையிலான அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு
## நாடு முழுவதும் சிலிண்டர் விற்பனை செய்யும் முகவர்கள் அதிருப்தி

புதுடெல்லி, ஆக. 30–

வீட்டு உபயோக சிலிண்டர் விலை ரூ. 200 குறைக்கப்படுவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது. இது குறித்து டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய அமைச்சர் அனுராக் சிங் தாக்கூர், "வீட்டு உபயோக சிலிண்டர்களைப் பயன்படுத்தும் அனைத்துப் பயனாளிகளும் பயன் பெறும் வகையில் சிலிண்டரின் விலையில் ரூ.200 குறைக்க பிரதமர் நரேந்திர மோடி முடிவெடுத்துள்ளார்.

ரக்ஷா பந்தனை முன்னிட்டு நமது நாட்டின் பெண்களுக்கு பிரதமர் நரேந்திர மோடியின் பரிசு இது. பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் இன்று [செவ்வாய்கிழமை] நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

பிரதமரின் உஜ்வாலா திட்டத்தின் கீழ் தற்போது 9.6 கோடி பயனாளிகள் உள்ளனர். மேலும், 75 லட்சம் பயனாளிகளைச் சேர்க்க மத்திய அரசு முடிவெடுத்துள்ளது. பிரதமரின் உஜ்வாலா திட்ட பயனாளிகளுக்கு ஏற்கனவே ரூ.200 ரூபாய் குறைவாக சிலிண்டர் விநியோகிக்கப்படுகிறது. அவர்களுக்கு தற்போது மேலும், ரூ.200 குறையும். அந்த வகையில், பிரதமரின் உஜ்வாலா திட்ட சிலிண்டர் பயனாளிகளுக்கு சிலிண்டருக்கு ரூ.400 குறையும்" என தெரிவித்தார்.

இந்த அறிவிப்பை அடுத்து பிரதமர் மோடி வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "ஒவ்வொரு குடும்பத்திலும் மகிழ்ச்சியை அதிகப்படுத்தக்கூடிய விழா ரக்ஷா பந்தன். சிலிண்டர் விலைக் குறைப்பு எனது குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு சகோதரிக்கும் கூடுதல் சவுகரியத்தைத் தரும். அவர்களது வாழ்க்கை மேலும் எளிதாகும். எனது ஒவ்வொரு சகோதரியும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்பதையே கடவுளிடம் நான் வேண்டுகிறேன்" என தெரிவித்துள்ளார்.

சிலிண்டர் விலை குறைப்பு உடனடியாக அமலுக்கு வருகிறது. இதன்மூலம், 14.2 கிலோ எடையுள்ள ஒரு சிலிண்டரின் விலையில் ரூ.200 குறைக்கப்படும். டெல்லியில் ஒரு சிலிண்டர் விலை தற்போது ரூ. 1,103 ஆக உள்ளது. இது ரூ. 903 ஆக குறைக்கப்படும். இதன்மூலம் நாடு முழுவதும் உள்ள சுமார் 33 கோடி பயனாளிகள் பயனடைவார்கள். பிரதமரின் உஜ்வாலா திட்டத்தின் கீழ் சிலிண்டர் பயன்படுத்தி வரும் 9.6 கோடி பயனாளிகளுக்கு ஏற்கனவே, ரூ.200 மாநியம் வழங்கப்பட்டு வருவதால் தற்போது அவர்கள் வாங்கும் சிலிண்டரின் விலையில் ரூ. 400 குறையும்.



### திடீர் அறிவிப்பு விற்பனையாளர்கள் பேரதிர்ச்சி

மத்திய அமைச்சரவை கூட்டத்திற்கு பிறகு சிலிண்டரின் விலை ரூபாய் 200 குறைக்கப்படும் என்ற அமைச்சரின் அறிவிப்பு நாடு முழுவதும் சிலிண்டர் விற்பனை செய்யும் முகவர்களுக்கு பேரிடியாய் அமைந்துள்ளது.

மத்திய அரசு அறிவித்திருப்பதை நாங்களும் வரவேற்கிறோம் என்று கூறும் அவர்கள் எண்ணெய் நிறுவனங்கள் எங்களை கட்டாயப்படுத்தி ஒவ்வொரு முகவரும் குறைந்தது 100 சிலிண்டர்களை இருப்பில் வைத்துக் கொள்ள அறிவுறுத்தி இருந்ததன் பேரில் நாங்கள் இருப்பு வைத்துள்ளோம். இப்படி இருக்கையில் உதாரணத்திற்கு ஒரு முகவர் 100 சிலிண்டர் இருப்பு வைத்திருந்தால் அவருக்கு அரசின் திடீர் அறிவிப்பு மூலமாக 20 ஆயிரம் ரூபாய் இழப்பீடு ஏற்படுகின்றது. இதனை எண்ணெய் நிறுவனங்கள் ஏற்க வேண்டும் என்று அவர்கள் தங்களது விருப்பத்தை தெரிவித்துள்ளனர்.



சென்னை, மதுரவாயல், துண்டலம் கிராமத்தில் அமைந்துள்ள 'தமிழ்த்தென்றல்' திரு.வி.கலியாணசுந்தரனார் நூலகத்தை, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் நேற்று பார்வையிட்டார். உடன் சட்டமன்ற உறுப்பினர் க.கணபதி அவர்கள் உள்ளார்.

# சமையல் எரிவாயு சிலிண்டருக்கு ரூ. 100 மானியம் வழங்கும் வாக்குறுதி என்னவானது?

### திமுகவுக்கு அண்ணாமலை கேள்வி

சென்னை , ஆக. 30–

சமையல் எரிவாயு சிலிண்டர் விலையில் ரூ.200 குறைத்து அறிவித்துள்ள மத்திய அரசுக்கு நன்றி தெரிவித்துள்ள பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை, சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றுக்கு 100 ரூபாய் மானியமாக வழங்குவதாக திமுக அளித்த தேர்தல் வாக்குறுதியை நினைவுபடுத்த விரும்புவதாகக் கூறியுள்ளார்.



இதுதொடர்பாக அவர் தனது சமூகவலைதளப் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "நாடுமுழுவதும் உள்ள அனைத்து சமையல் எரிவாயு பயனாளர்களுக்கும், ரூ.200 கூடுதலாக மானியம் அறிவித்து, சமையல் எரிவாயு சிலிண்டர் விலையில் ரூ.200 குறைத்து அறிவித்துள்ள பிரதமர் நரேந்திர மோடிக்கு, தமிழக பாஜக சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். உஜ்வாலா சமையல் எரிவாயு திட்டத்தின் கீழ், மேலும் 75 லட்சம் பயனாளிகளுக்கு இலவச சமையல் எரிவாயு இணைப்பு வழங்கி அறிவிப்பு வெளியிட்டுள்ள பிரதமர் நரேந்திர மோடி, தலைமையிலான மத்திய அரசுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கடந்த 2022 ஆம் ஆண்டு மே மாதம், மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், உஜ்வாலா சமையல் எரிவாயு பயனாளிகளுக்கு ரூ.200 மானியம் அறிவித்திருந்தார். இந்த ஆண்டு மார்ச் மாதம், மேலும் ஓராண்டுக்கு ரூ.200 மானியம் நீட்டிக்கப்பட்டது. இன்றைய அறிவிப்பின் மூலம், நாடு முழுவதும் உள்ள 9.6 கோடி உஜ்வாலா பயனாளிகள், ஒரு சிலிண்டருக்கு ரூ.400 மானியமாகப் பெறுவார்கள். இந்த நேரத்தில், சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றுக்கு 100 ரூபாய் மானியமாக வழங்குவதாக தேர்தல் வாக்குறுதி எண் 503-ல் கூறிய ஊழல் திமுக, ஆட்சிக்கு வந்து 27 மாதங்கள் கடந்தும் அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதைக் குறித்து எந்த அக்கறையும் இல்லாமல் இருப்பதை நினைவுபடுத்த விரும்புகிறோம்" என்று கூறியுள்ளார்.

## சொத்துக் குவிப்பு வழக்கில்

# விஜயபாஸ்கர் அவரது மனைவி புதுகை நீதிமன்றத்தில் ஆஜர் விசாரணை அடுத்த மாதம் 26 ஆம் தேதிக்கு ஒத்திவைப்பு

புதுக்கோட்டை, ஆக. 30–

சொத்துக் குவிப்பு வழக்கில் அதிமுகவை சேர்ந்த விஜயபாஸ்கர் அவரது மனைவி இருவரும் புதுகை நீதிமன்றத்தில் நேற்று ஆஜராகியதையடுத்து விசாரணை அடுத்த மாதம் 26 ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளது.



கடந்த அதிமுக ஆட்சியில் 2013 ஆம் ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை 8 ஆண்டுகள் சுகாதாரத்துறை அமைச்சராக இருந்தவர் புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை விஜயபாஸ்கர். தற்போது விராலிமலை தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும், கட்சியின் வடக்கு மாவட்டச் செயலாளராகவும் உள்ளார்.

இந்நிலையில் கடந்த 17.10.21 அன்று வருமானத்தை விட ரூ. 35 கோடியே 79 லட்சத்து 81 ஆயிரம் வரை வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக, அதாவது வருமானத்தை விட 54 சதவீதம் கூடுதலாக விராலிமலை விஜயபாஸ்கர் மற்றும் அவரது மனைவி ரம்யா உள்ளிட்ட குடும்பத்தினர் சொத்து சேர்த்ததாக புதுக்கோட்டை லஞ்ச ஒழிப்புத்துறை போலீசாரால் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இந்த வழக்கின் அடிப்படையில் கடந்த 18.10.21 அன்று முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கரின் இலுப்பூர், சென்னை வீடுகள் மற்றும் அவரது உறவினர்கள் வீடு உள்ளிட்ட 56 இடங்களில் லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் சோதனை நடத்தினர். சோதனையில் ரூ. 23 லட்சத்து 85 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பணம், 4.87 கிலோ தங்கம் 3.75 கிலோ வெள்ளி பொருட்கள், 136 கனரக வாகன பதிவு ஆவணங்கள், 19 ஹார்ட் டிஸ்க்கள், சொத்து ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த சோதனையைத் தொடர்ந்து கடந்த 22.5.23 அன்று 216 பக்கங்களைக் கொண்ட குற்றப்பத்திரிக்கையை லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் புதுக்கோட்டை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் சமர்ப்பித்தனர். அதனுடன் சுமார் 10 ஆயிரம் பக்கங்களைக் கொண்ட 800 சொத்து ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த வழக்கின் முதல் விசாரணை ஆகஸ்ட் 5 ஆம் தேதி தொடங்கிய நிலையில் அன்று முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர் விஜயபாஸ்கர் புதுக்கோட்டை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்தார். அவரது மனைவி ரம்யா அன்று ஆஜராகாத நிலையில் 29ம் தேதி விஜயபாஸ்கர் மற்றும் அவரது மனைவி ரம்யா ஆகியோர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராக நீதிபதி உத்தரவு பிறப்பித்தார்.

அதன் அடிப்படையில் நேற்று 29 ஆம் தேதி முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர் மற்றும் அவரது மனைவி ரம்யா ஆகியோர் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் ஆஜராகினர். விஜயபாஸ்கர் நீதிமன்றம் வருவதால் நீதிமன்ற வளாகத்தை சுற்றி போலீசார் குவிக்கப்பட்டிருந்தனர். மேலும் அதிமுக நிர்வாகிகளும் தொண்டர்களும் நீதிமன்ற வளாகத்தில் குவிந்தனர். தொண்டர்கள் படை சூழ நீதிமன்றத்தில் விஜயபாஸ்கர் ஆஜராகினர். இதேபோல் அவரது மனைவி ரம்யா மற்றொரு வழியில் வந்து வழக்கறிஞர்களுடன் நீதிமன்றத்தில் ஆஜரானார். அப்போது பத்திரிகையாளர்கள் அவரை படம் எடுக்க சில வழக்கறிஞர்கள் தடுத்தனர். வழக்கை விசாரித்த நீதிபதி இந்த வழக்கை அடுத்த மாதம் 26 ஆம் தேதிக்கு ஒத்திவைத்தார். இதனையடுத்து நீதிமன்றத்தில் இருந்து விஜயபாஸ்கரும் அவரது மனைவியும் புறப்பட்டுச் சென்றனர். இதனால் சிறிது நேரம் நீதிமன்ற வளாகத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

# புதுக்கோட்டை ஸ்ரீ ஆஞ்சநேய மூர்த்தி சுவாமி ஆலயத்தில் ஸ்ரீ லெட்சுமி ஹயக்ரீவர் ஜெயந்தி விழா

புதுக்கோட்டை , ஆக. 30–

புதுக்கோட்டை தெற்கு நான்காம் வீதி பெரிய அனுமார் கோவில் மார்க்கெட் தெருவில் அருள் பாலித்து வரும் ஸ்ரீ ஆஞ்சநேய மூர்த்தி சுவாமி அனுமன் திருச்சபையினர் சார்பில் ஸ்ரீ லெட்சுமி ஹயக்ரீவர் ஜெயந்தி விழா நடைபெற்றது.



புதுக்கோட்டை தெற்கு 4 -ஆம் வீதி மார்கெட் சந்திப்பிலுள்ள இந்து சமய அறநிலையத்துறை சார்ந்த ஆஞ்சநேயர் திருக்கோயிலில் ஸ்ரீ லெட்சுமி ஹயக்ரீவர் ஜெயந்தி வழிபாடு மற்றும் மலர்பூஜை செய்து தீபாராதனை நடைபெற்றது. ஆலயத்தில் 11 ஆண்டாக ஆலயத்தில் லட்சுமி ஹயக்ரீவர் கல்விசங்கல்பபூஜை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. லட்சுமி ஹயக்ரீவர் பூஜையில் கலந்து கொண்டவர்கள் அதி மேன்மையான கௌரவ பதவி ஸ்தானம் கிடைக்க வேண்டும் என்ற நோக்கோடு அவர்களுக்காக வேலை வாய்ப்பிற்கான விசேஷ பூர்வமானது ஹய்கிரிவர் ஆசிர்வாதத்தோடு கற்பக விநாயகர் பூஜை தொடங்கி புண்ணியாகராஜனம் கலச ஆவாகனம் பூர்ணாஹுதி மஹா தீபாராதனை நடைபெற்றது இதில் புதுக்கோட்டை வட்டார கல்வி அலுவலர் பிரியா கலந்துகொண்டு மாணவ மாணவியர்களுக்கு கல்வி அறிவுரை வழங்கினார்.

நிகழ்வில் அனைத்து பேருக்கும் கௌரவ பதவி கிடைக்கவேண்டும் என்ற நோக்கோடு நம் ஆலயத்தில் அவர்களுக்கு எழுது பொருள் லட்சுமி ஹயக்ரீவர் ஆசீர்வாதத்துடன் வழங்கப்பட்டது ஆலய சிவாச்சாரியார் மணி குருக்கள் மற்றும் திருக்கோகர்ணம் சீனிவாச குருக்கள் தலைமையிலும் பூஜை சிறப்பாக நடைபெற்றது. பக்தர்கள் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. நிகழ்வில், கல்வியாளர்கள், கவிஞர் நிலவை பழனியப்பன் மற்றும் ஆசிரியர்கள் கல்லூரி மாணவ, மாணவிகளின் பெற்றோர்கள் கலந்து கொண்டனர் ஏற்பாடுகளை, அனுமன் திருச்சபையினர், ஆன்மிகநெறியாளர் ஆனந்தன் தலைமையில் நிர்வாகிகள் சிறப்பாக செய்திருந்தனர்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# காவிரியில் 24,000 கன அடி தண்ணீர் திறக்க வலியுறுத்தப்படும் அமைச்சர் துரைமுருகன் உறுதி

சென்னை, ஆக. 30-

காவிரியில் விநாடிக்கு 24,000 கன அடி வீதம் தண்ணீர் திறக்க உத்தரவிடக் கோரி காவிரி மேலாண்மை ஆணையத்தில் வலியுறுத்தப்படும் என்று தமிழக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் கூறியுள்ளார்.



சென்னை கோட்டூர்புரத்தில் தமிழக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியது: "காவிரி ஒழுங்காற்று குழுவிடம், விநாடிக்கு 24 ஆயிரம் கனஅடி, வீதம் 10 நாட்களுக்கு தமிழகத்துக்கு தண்ணீர் திறக்க வேண்டும் என்று ஒரு கோரிக்கையை வைத்தோம். ஆனால், அந்தக் குழு, 15 நாட்களுக்கு 5000 கனஅடி தண்ணீர் திறக்க சிபாரிசு செய்திருக்கிறது.

அதுபோதுமானது அல்ல என்பது நம்முடைய நிலைப்பாடு. எனவே, செவ்வாய்கிழமை பகல் 2.30 மணிக்கு காவிரி மேலாண்மை ஆணையத்தின் கூட்டம் நடைபெறுகிறது. அந்தக் கூட்டத்தில், தமிழக நீர்வளத் துறை செயலர் சந்தீப் சக்சேனா உள்ளிட்டோர் கலந்துகொள்கின்றனர். அவர்களிடம் தமிழகத்தின் கோரிக்கையை வற்புறுத்தும்படி கோரியிருக்கிறேன்.

தண்ணீர் திறப்பு 24,000 கன அடியாக இருந்தால்தான், பயிர்கள் கருகாமல் இருக்கும் என்பதை, அழுத்தம் திருத்தமாக வலியுறுத்துமாறு கேட்டுக் கொண்டுள்ளேன். எனவே, இன்றைய கூட்டத்தில் அவர்கள் இந்த கோரிக்கையை முன்வைப்பார்கள்" என்று அவர் கூறினார்.

முன்னதாக, டெல்லியில் உள்ள நீர்வள அமைச்சகத்தில் காவிரி ஒழுங்காற்று குழு கூட்டம் திங்கள்கிழமை நடந்தது. இதில் தமிழகம், கர்நாடகா, புதுச்சேரி, கேரளா மாநில அதிகாரிகள் காணொலி வாயிலாக பங்கேற்றனர்.

அப்போது, தமிழக நீர்வளத் துறை செயலர் சந்தீப் சக்சேனா, "உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி ஆகஸ்டில் வழங்க வேண்டிய நீரில் இன்னும் 54 டிஎம்சி வழங்கப்படவில்லை. இதனால், தமிழகத்தில் குறுவை சாகுபடி பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, தமிழகத்துக்கு அடுத்த 15 நாட்களுக்கு 24 ஆயிரம் கனஅடி நீர் திறக்க வேண்டும்" என்று கோரினார். அதற்கு கர்நாடக அரசு அதிகாரிகள், "அணைகளில் நீர் இருப்பு குறைவாக இருப்பதால் அவ்வளவு நீர் திறக்க முடியாது" என்றனர்.

கூட்டத்தின் நிறைவில் காவிரி ஒழுங்காற்று குழு, தமிழகத்துக்கு அடுத்த 15 நாட்களுக்கு விநாடிக்கு 5,000 கனஅடி வீதம் நீர் திறக்குமாறு கர்நாடகாவுக்கு பரிந்துரை செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# தமிழகத்துக்கு காவிரியில் விநாடிக்கு 5,000 கனஅடி நீர் திறக்க ஒழுங்காற்று குழு பரிந்துரை செப்.7-ம் தேதி நேரில் ஆய்வு

புதுடெல்லி , ஆக. 30-

தமிழகத்துக்கு அடுத்த 15 நாட்களுக்கு விநாடிக்கு 5,000 கனஅடி வீதம் நீரை திறந்துவிட காவிரி ஒழுங்காற்று குழு பரிந்துரை செய்துள்ளது.



உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி கர்நாடக அரசு நீர் திறக்கவில்லை என்று உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு கடந்த 14-ம் தேதி வழக்கு தொடர்ந்தது. இதை விசாரித்த நீதிமன்றம், கர்நாடக அணைகளின் நீர் இருப்பு குறித்து அறிக்கை தாக்கல் செய்யுமாறு காவிரி மேலாண்மை ஆணையத்துக்கு உத்தரவிட்டது.

இந்நிலையில், டெல்லியில் உள்ள நீர்வள அமைச்சகத்தில் காவிரி ஒழுங்காற்று குழு கூட்டம் திங்கள்கிழமை நடந்தது. இதில் தமிழகம், கர்நாடகா, புதுச்சேரி, கேரளா மாநில அதிகாரிகள் காணொலி வாயிலாக பங்கேற்றனர்.

அப்போது, தமிழக நீர்வளத் துறை செயலர் சந்தீப் சக்சேனா, "உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி ஆகஸ்டில் வழங்க வேண்டிய நீரில் இன்னும் 54 டிஎம்சி வழங்கப்படவில்லை. இதனால், தமிழகத்தில் குறுவை சாகுபடி பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, தமிழகத்துக்கு அடுத்த 15 நாட்களுக்கு 24 ஆயிரம் கனஅடி நீர் திறக்க வேண்டும்" என்று கோரினார். அதற்கு கர்நாடக அரசு அதிகாரிகள், "அணைகளில் நீர் இருப்பு குறைவாக இருப்பதால் அவ்வளவு நீர் திறக்க முடியாது" என்றனர்.

கூட்டத்தின் நிறைவில் காவிரி ஒழுங்காற்று குழு, தமிழகத்துக்கு அடுத்த 15 நாட்களுக்கு விநாடிக்கு 5,000 கனஅடி வீதம் நீர் திறக்குமாறு கர்நாடகாவுக்கு பரிந்துரை செய்துள்ளது.

இதற்கிடையே, இக்கூட்டத்தில் புதுச்சேரி சார்பில், "காவிரி நீரை புதுச்சேரிக்கு திறந்துவிடும் காரைக்கால் வாய்க்கால் பகுதியில் தமிழகத்தின் பாசனப் பகுதிகளும் இருப்பதால் நீர் முழுமையாக எங்களுக்கு வருவதில்லை. எனவே, வாய்க்கால் அமைந்துள்ள இடத்தை மாற்ற வேண்டும். புதுவைக்கு தமிழகம் வழங்க வேண்டிய 0.6 டிஎம்சி நிலுவை நீரை திறக்க வேண்டும்" என கோரிக்கை வைக்கப்பட்டது. இதை ஏற்று, காவிரி ஒழுங்காற்று குழு செப்.7-ல் நேரில் ஆய்வு செய்ய உள்ளது. பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தமிழகம், புதுச்சேரி அரசுகள் கூறியுள்ள நிலையில், அந்த இடங்களையும் குழு பார்வையிடும் என தெரிகிறது.




# காவிரி ஒழுங்காற்று குழு கூறியபடி தமிழகத்துக்கு தண்ணீர் திறக்க முடியாது கர்நாடகா அடம்

பெங்களூரு , ஆக. 30-

காவிரி ஒழுங்காற்று குழு கூறியபடி, தமிழகத்துக்கு தண்ணீர் திறக்க முடியாது என்று கர்நாடகா தெரிவித்துள்ளது.



தமிழகத்துக்கு காவிரியில் இருந்து 15 நாட்களுக்கு 5000 கனஅடி தண்ணீர் திறக்க காவிரி ஒழுங்காற்று குழு திங்கள்கிழமை உத்தரவிட்டது. இந்த உத்தரவு குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அம்மாநில அமைச்சர் எம்.பி.பாடீல், "காவிரியில் இருந்து தமிழகத்துக்கு வினாடிக்கு 5 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறக்க காவிரி ஒழுங்காற்றுக் குழு உத்தரவிட்டுள்ளது. ஆனால், எங்களிடம் தண்ணீர் இல்லை. காவிரி ஒழுங்காற்றுக் குழுவின் உத்தரவு நிறைவேற்ற முடியாத ஒன்று. எனவே, நாங்கள் சட்ட வழியைப் பின்பற்ற உள்ளோம்.

காவிரி விவகாரத்தில் அறிவியல் பூர்வமான மற்றும் நடைமுறைப்படுத்தக்கூடிய திட்டத்தை முன்வைத்தால்தான் அது சாத்தியமாகும். இல்லாவிட்டால், அனைவருக்கும் சங்கடம்தான் ஏற்படும். கர்நாடகாவின் குடிநீர் தேவை மற்றும் விவசாயத் தேவைக்கு இருக்கும் தண்ணீரை தமிழகத்துக்குக் கொடுக்க வேண்டும் என்கிறார்கள். நாங்கள் எவ்வாறு கொடுக்க முடியும்?" எனத் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, சென்னையில் நேற்று காலை செய்தியாளர்களிடம் பேசிய தமிழக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், "காவிரி ஒழுங்காற்று குழுவிடம், விநாடிக்கு 24 ஆயிரம் கனஅடி, வீதம் 10 நாட்களுக்கு தமிழகத்துக்கு தண்ணீர் திறக்க வேண்டும் என்று ஒரு கோரிக்கையை வைத்தோம். ஆனால், அந்தக் குழு, 15 நாட்களுக்கு 5000 கனஅடி தண்ணீர் திறக்க சிபாரிசு செய்திருக்கிறது. அதுபோதுமானது அல்ல என்பதுநம்முடையநிலைப்பாடு. தண்ணீர் திறப்பு 24,000 கன அடியாக இருந்தால்தான், பயிர்கள் கருகாமல் இருக்கும்" என்று தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மக்கள் தொகை பெருக்கம் மட்டுமே

# இந்தியாவின் பொருளாதாரத்தை வலுப்படுத்த போதுமானதாகாது மூடிஸ் கணிப்பு

டெல்லி , ஆக. 30-

இந்தியாவில் அதிகரித்துவரும் மக்கள் தொகை தொழிலாளர் பங்களிப்பை அதிகரிக்கும் என்றாலும்கூட அதுமட்டுமே பொருளாதாரத்தை வலுவானதாக்கிவிட போதுமானதாக இருக்காது. அதற்கு இங்குள்ள கற்றல் விளைவின் தரமும் ஒரு காரணமாகும் என்று கடன்தர நிர்ணய நிறுவனமான மூடிஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.



மேலும், கல்வித்தரத்தை மேம்படுத்துவது இந்தியா போன்ற நாடுகள் டிஜிட்டல்மயமாக்கல் மற்றும் செயற்கை நுண்ணறிவு வளர்ச்சியால் வேலையிழப்புக்கு உள்ளாவதைத் தவிர்த்துக் கொள்ள இயலும். குறிப்பாக பிபிஓ, கால்சென்டர்கள்போன்ற சேவை மையங்களிலும் வேலையிழப்பைத் தவிர்க்கலாம். இப்போதைக்கு இந்தியாவின் கற்றல் விளைவின் தரம் பாகிஸ்தான், வங்கதேசத்தில் உள்ளதுபோல்தான் இருக்கிறது என்றும் தெரிவித்துள்ளது.

இத்தகவல்களை Population growth alone will not drive credit benefits for emerging economies என்ற தலைப்பிலான அறிக்கையில் மூடிஸ் வெளியிட்டுள்ளது.

இந்தியாவில் அதிகரித்துவரும் மக்கள் தொகையால் நாட்டில் உழைக்கும் மக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். இதனால் பொருளாதார வளர்ச்சி ஏற்படும். ஆனால், இதுமட்டுமே பொருளாதாரத்தை வலிமையாக்குவதுடன், நிதிப் பலன்களையும் பெருகச் செய்துவிடாது. வலிமையான பொருளாதாரத்துக்கு வலிமையான கல்விக் கட்டமைப்பு, தரமான உட்கட்டமைப்பு ஆகியனவும் அவசியம்.

கல்வித் தரத்தில் சீனாவுடன் ஒப்பிடுகையில் இந்தியா, பாகிஸ்தான், வங்கதேசத்தில் மிகப்பெரிய இடைவெளி நிலவுகிறது.

அடுத்த 20 ஆண்டுகளில் இந்தியா, வங்கதேசம், இந்தோனேசியா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், வியட்நாம் ஆகிய நாடுகளில் பணிபுரியும் வயதில் உள்ளோரின் எண்ணிக்கை 40 சதவீதம் அதிகரிக்கும். இந்தச் சூழலில் இந்நாடுகள் கல்வித் தரம், உள்கட்டமைப்பு மேம்பாட்டில் இன்னும் கவனம் செலுத்த வேண்டும்.

இந்தியா, வங்கதேசத்தில் மேல்நிலைப்பளிப் படிப்பை முடித்த ஆண்கள், பெண்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



நீலகிரி கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் கூட்டத்தில், மெய்லூர் எஸ்டேட் கோட்டக்கல் பகுதியை சேர்ந்த வித்யாசாகருக்கு வெதண்டா பயிற்சியகத்தில் சேர்ந்து பயில்வதற்காக கலெக்டரின் விருப்புரிமை நிதியிலிருந்து, ரூ.30 ஆயிரத்திற்கான காசோலையை கலெக்டர் (பொ) / மாவட்ட வருவாய் அலுவலர் கீர்த்தி பிரியதர்சினி வழங்கினார். இக்கூட்டத்தில், 121 மனுக்கள் பெறப்பட்டது. இந்நிகழ்ச்சியில், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொது) தனபிரியா, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி.) கல்பனா உட்பட பலர் கலந்து கொண்டனர்.



மதுரை மாவட்டம் தே. கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியம், கவுண்டம்பட்டி ஊராட்சி மன்றத்தில் செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பாக தமிழக அரசின் நூற்றாண்டுகள், அரசின் திட்டங்கள் மற்றும் சாதனை தொடர்பாக விளக்கும் சிறு புகைப்பட கண்காட்சி நடைபெற்றது இக்கண்காட்சியை பொதுமக்கள் கண்டு களித்து மகிழ்ந்தனர்.



வட கிழக்கு பருவ மழை முன்னெச்சரிக்கை பணிகளை எதிர்கொள்ளும் வகையில் சென்னை குடிநீர் மற்றும் கழிவு நீர் நீரேற்றம் வாரியம் சார்பில் கழிவு நீர் அகற்றும் வாகனங்களை தூர்வாரும் பணிகளைத் தொடங்க திருவொற்றியூர் மண்டலம் குழு தலைவர் திமு தனியரசு கொடி அசைத்து தொடங்கி வைத்தார். சென்னை மாநகராட்சி திருவொற்றியூர் ஒண்ணாவது மண்டலம் ஒன்னு முதல் 15 வார்டுகள் உள்ளன வடகிழக்கு பருவமழை தொடங்குவதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சென்னை குடிநீர் மற்றும் கழிவு நீர் வாரியம் சார்பில் கழிவுநீர் தொட்டிகளை அனைத்திற்கும் குப்பைகளை அகற்ற ஜெட்ராடு, டிசல்டு, சர்க்கர் ஆகிய கழிவுநீர் அகற்றும் வாகனங்களை தூர்வாரும் பணிகளை திருவொற்றியூர் மண்டல குழு தலைவர் கொடி அசைத்து வைத்து துவக்கி வைத்தார்.

# ஒரு குவிண்டால் நெல்லுக்கு குறைந்தது ரூ.500 ஊக்கத் தொகையாக வழங்க அரசு முன்வர வேண்டும் அன்புமணி கோரிக்கை

சென்னை , ஆக. 30-

"மத்திய அரசு ஒரு குவிண்டால் நெல்லுக்கு கொள்முதல் விலையாக ரூ.2203 மட்டுமே அறிவித்துள்ள நிலையில், மீதமுள்ள 797 ரூபாயை தமிழக அரசு ஊக்கத் தொகையாக வழங்க வேண்டும். அவ்வளவு தொகை வழங்க வாய்ப்பில்லை என்றால் குறைந்த அளவு குவிண்டாலுக்கு 500 ரூபாயாவது ஊக்கத் தொகையாக வழங்க தமிழக அரசு முன்வர வேண்டும்" என்று பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.



இதுதொடர்பாக அவர் தனது சமூகவலைதளப் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "தமிழகத்தில் 2023-24 ஆம் ஆண்டுக்கான நெல் கொள்முதல் வழக்கமாகத் தொடங்கும் அக்டோபர் ஒன்றாம் நாளுக்கு பதிலாக செப்டம்பர் ஒன்றாம் நாளே தொடங்கும் என்று தமிழக அரசு அறிவித்திருக்கிறது. காவிரி பாசன மாவட்டங்களில் குறுவை அறுவடை முன்கூட்டியே தொடங்கிவிட்ட நிலையில், அந்த நெல்லுக்கு உயர்த்தப்பட்ட விலை கிடைப்பதற்கு வசதியாக நெல் கொள்முதலை செப்டம்பர் மாதமே தொடங்கும்படி பாமக வலியுறுத்தி வந்த நிலையில், அதன்படியே கொள்முதல் தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. இதன்மூலம் முன்கூட்டியே அறுவடை முடித்த உழவர்கள் பயனடைவார்கள்.

அதேநேரத்தில் நெல்லுக்கு அறிவிக்கப்பட்டுள்ள கொள்முதல் விலை போதுமானதல்ல. ஒரு குவிண்டால் நெல்லுக்கான குறைந்த அளவு ஆதரவு விலையாக சன்ன ரகத்துக்கு ரூ.2203, சாதாரண ரகத்துக்கு ரூ.2183 என மத்திய அரசு அறிவித்திருக்கிறது. அத்துடன் சாதாரண நெல்லுக்கு ரூ82, சன்னரக நெல்லுக்கு ரூ.107 வீதம் ஊக்கத்தொகை சேர்த்து சாதாரண நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,265, சன்னரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,310 வழங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்திருக்கிறது. கடந்த ஆண்டு சாதாரண நெல்லுக்கு ரூ 75, சன்னரக நெல்லுக்கு ரூ.100 வீதம் ஊக்கத்தொகை வழங்கிய தமிழக அரசு, நடப்பாண்டில் ரூ. 7 மட்டுமே, அதாவது ஒரு கிலோவுக்கு 7 காசு மட்டுமே உயர்த்தி வழங்கியிருக்கிறது. இது எந்த வகையிலும் போதுமானது அல்ல.

இந்தியாவில் நெல்லுக்கு கடுமையான பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. அதனால், அரிசி ஏற்றுமதிக்கு மத்திய அரசு தடை விதித்திருக்கிறது. அதன் காரணமாக உலகம் முழுவதும் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையை மாற்ற, நெல் சாகுபடியை அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது. நெல் கொள்முதல் விலையை அதிகரிப்பதன் மூலம் தான் இதை சாதிக்க முடியும். ஆனால், கிலோவுக்கு 7 காசு அளவுக்கு ஊக்கத்தொகையை உயர்த்துவதன் மூலம் நெல் சாகுபடியை எவ்வாறு அதிகரிக்க முடியும்?

ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூ.3000 கொள்முதல் விலை வழங்க வேண்டும் என்று பல ஆண்டுகளாக உழவர்கள் வலியுறுத்தி வருகின்றனர். ஒரு குவிண்டால் நெல்லை உற்பத்தி செய்ய ரூ.2000 செலவு ஆவதாக கோவை வேளாண் பல்கலைக்கழகம் மதிப்பீடு செய்திருக்கிறது. அத்துடன் 50%, அதாவது ரூ.1000 லாபம் சேர்த்து வழங்கினால் கூட, குவிண்டாலுக்கு ரூ.3000 கொள்முதல் விலையாக வழங்க வேண்டும். மத்திய அரசு ஒரு குவிண்டால் நெல்லுக்கு கொள்முதல் விலையாக ரூ.2203 மட்டுமே அறிவித்துள்ள நிலையில், மீதமுள்ள 797 ரூபாயை தமிழக அரசு ஊக்கத்தொகையாக வழங்க வேண்டும். அவ்வளவு தொகை வழங்க வாய்ப்பில்லை என்றால் குறைந்த அளவு குவிண்டாலுக்கு 500 ரூபாயாவது ஊக்கத் தொகையாக வழங்க தமிழக அரசு முன்வர வேண்டும்", என்று அவர் பதிவிட்டுள்ளார்.

# சிறுவர்கள் டிராக்டர் ஓட்டுவதை கட்டுப்படுத்த வேண்டும் தருமபுரியில் வலுக்கும் குரல்கள்

தருமபுரி , ஆக. 30-

தருமபுரி மாவட்டத்தில் மிகக் குறைந்த வயதுடையவர்கள் டிராக்டர்களை ஓட்டிச் செல்வதை தடுக்க வேண்டுமென கோரிக்கை எழுந்துள்ளது.

தருமபுரி மாவட்டத்தில் வேளாண் பணிகள், கட்டுமானப் பணிகள் உள்ளிட்ட பல்வேறு பணிகளில் ஏராளமான டிராக்டர்கள் பயன்பாட்டில் உள்ளன. இவற்றை சிறுவர்களும், குறைந்த வயதுடையவர்களும் ஓட்டிச் செல்கின்றனர். இந்த நடைமுறையை தடைசெய்ய வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.

இது குறித்து, தருமபுரியைச் சேர்ந்த சமூக ஆர்வலர் அழகேசன் கூறியது: தருமபுரி மாவட்டத்தில் பல்வேறு பணிகளுக்காக ஏராளமான டிராக்டர்கள் பயன்பாட்டில் உள்ளன. ஆங்காங்கே இவற்றை இயக்கும் சிறுவர்களில் ஒருசிலரைத் தவிர பெரும்பாலானவர்கள் பழகுநர்களாகவும், போதிய அனுபவமற்றவர்களாகவும் உள்ளனர்.

வேளாண் பணிகளுக்காக விளை நிலங்களில் பயன்படுத்தப் படும் டிராக்டர்களை சிறுவர்கள் அல்லது குறைந்த வயதுடையவர்கள் இயக்கும் போது பெரிய பாதிப்புகள் ஏற்படாது. குறிப்பாக மற்றவர்களுக்கு ஆபத்து நேராது. ஆனால், பொது சாலைகளில் டிராக்டர்களை ஓட்டிச் செல்லும் சிறுவர்கள் மற்றும் குறைந்த வயதுடையவர்களால் பல இடங்களில் சிறுசிறு விபத்துகள் ஏற்படுகின்றன.

போதிய அனுபவம் இல்லாமல் டிராக்டர்களை இயக்குவதே இதற்குக் காரணம். சில தினங்களுக்கு முன்னர் தருமபுரி - சேலம் நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்த புதிய டிராக்டர் ஒன்றை சுமார் 16 முதல் 18 வயதுடைய ஒரு சிறுவன் ஓட்டிச் சென்றார். இலக்கியம்பட்டி பகுதியில் சென்ற போது டிராக்டரின் குலுக்கலால் அந்த சிறுவனின் சட்டைப் பையில் இருந்த செல்போன் சாலையில் விழுந்தது.



இதனால் பதற்றமான சிறுவன் டிராக்டரை 'ஜிக்ஜாக்' வடிவில் ஓட்ட சாலையில் சென்ற வாகன ஓட்டிகள் தடுமாறினர். மேலும், சாலையில் விழுந்த செல்போன் மீது மற்ற வாகனங்கள் ஏறினால் சேதமடையும் என்பதால் அதனை உடனே எடுக்க வேண்டும் என்ற நோக்கத்தில் டிராக்டரை நிறுத்துவதற்காக சாலையின் இடதுஓரமாக ஓட்டிச் செல்ல முயன்றார்.

அப்போது, பின்னால் வரும் வாகனங்கள் குறித்த அக்கறை ஏதுமின்றியும், போக்குவரத்து சிக்னல் எதையும் ஏற்படுத்தாமல் டிராக்டரை ஓட்டினார். இதனாலும் அவ்வழியே வந்த அடுத்தடுத்த வாகன ஓட்டிகளும் தடுமாற்றமடைந்து சிறுவனை கண்டித்துவிட்டு கடந்து சென்றனர். நல்வாய்ப்பாக இந்த சம்பவத்தால் விபத்து எதுவும் ஏற்படவில்லை.

செல்போனை உரிய பாதுகாப்புடன் வைத்துச் செல்லாததும், சாலையில் தவறி விழுந்த செல்போன் மீதான அக்கறையில் வண்டியை தாறுமாறாக ஓட்டியதும், சிக்னல் ஏற்படுத்தாமல் வண்டியை ஓரம் கட்ட நினைத்ததும் அந்த சிறுவனுக்கு ஓட்டுநர் பணியில் போதிய அனுபவம் இல்லை என்பதையே காட்டுகிறது.

இவ்வாறானவர்கள் சில நேரங்களில் பெரும் விபத்துகளுக்குக் காரணமாகி விடுகின்றனர். எனவே, இதுபோன்றவர்களை கட்டுப்படுத்தி, அவர்கள் போதிய பயிற்சியுடன் பொது சாலைகளில் வாகனம் இயக்கும் வகையில் போக்குவரத்துத் துறையும், காவல்துறையும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு கூறினார்.

# சீர்காழியில் தேசிய விளையாட்டு தினத்தை முன்னிட்டு மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சைக்கிள் பேரணி



சீர்காழி , ஆக.30-
சீர்காழியில் தேசிய விளையாட்டு தினத்தை முன்னிட்டு மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நடைபெற்ற சைக்கிள் பேரணி-காவல் ஆய்வாளர் துவக்கி வைத்தார்:

இந்தியாவின் சிறந்த ஹாக்கி வீரராக திகழ்ந்த தியான் சந்த்தை பெருமைப்படுத்தும் விதமாக அவரது பிறந்த நாளான ஆகஸ்ட் 29ஆம் தேதி இந்திய தேசிய விளையாட்டு தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்நாளை குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் தனியார் பள்ளி சார்பில் விழிப்புணர்வு சைக்கிள் பேரணி நடைபெற்றது.

விளையாட்டின் முக்கியத்துவம் குறித்தும், ஆரோக்கியமான வாழ்விற்கு விளையாட்டு மட்டுமே அடித்தளம் என்பதை வலியுறுத்தி நடைபெற்ற சைக்கிள் பேரணியை சீர்காழி காவல் ஆய்வாளர் சிவகுமார் புதிய பேருந்து நிலையத்திலிருந்து துவக்கி வைத்தார்.

பள்ளி மாணவ மாணவிகள் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள் உள்ளிட்ட 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட பேரணியானது சீர்காழி முக்கிய விதிகளின் வழியாக பள்ளியை வந்தடைந்தது. பின்னர் பள்ளி வளாகத்தில் விளையாட்டின் முக்கியத்துவம் குறித்து உறுதிமொழியை பள்ளி மாணவ மாணவிகள் எடுத்துக் கொண்டனர்.

இதில் பள்ளியின் முதல்வர் ஆபிரகாம் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள், மாணவர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# தென்காசி மாவட்டம் கடையம் அருகே சந்திராயன் 3 வெற்றி யோகா விழிப்புணர்வு நிகழ்ச்சி




தென்காசி, ஆக.30-
தென்காசி மாவட்டம் கடையம் அருகே உள்ள இரவணசமுத்திரம் பகுதியில் சந்திராயன் 3 விண்கலத்தின் விக்ரம் லேண்டர் நிலவில் தரையிறங்கிய சாதனை வெற்றியை கொண்டாடும் வகையில் யோகா விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

நிலவின் தென் துருவத்தை ஆய்வு செய்ய இஸ்ரோ அனுப்பிய சந்திராயன் 3 விண்கலத்தின் விக்ரம் லேண்டர் நிலவில் தரையிறங்கியது இந்த வெற்றியின் மூலம் நிலவின் தென் துருவத்தை தொட்ட முதல் நாடு என்ற சாதனையை நமது இந்தியா பெற்றுள்ளது. இதனை போற்றும் வண்ணம் இரவணசமுத்திரம் மாணவிகளின் யோகா விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

தென்காசி மாவட்டம் கடையம் அருகே இரவணசமுத்திரம் கிராமத்தை சேர்ந்த மளிகை கடை ஊழியரின் மகள்கள் குற்றாலம் செய்யது பள்ளி குழுமத்தில் ஷாஜிதா ஜைனப் 5 ம் வகுப்பும் மிஸ்பா நூருல் ஹபிபா 12ம் வகுப்பும் இச்சகோதரிகள் பயின்று வருகின்றனர் இவ்விருவரும் உள்ளூரில் வைத்து நிலவில் லேண்டர் தரையிறங்கும் காட்சி போல் இந்திய வரைபடத்துடன் வடிவமைத்து கைகளில் தேசிய கொடி ஏந்தி பல்வேறு யோகாசனம் மூலம் சந்திரயான் 3 வெற்றிக்காக பாடுபட்ட விஞ்ஞானிகள் கடின உழைப்பாலும் திறமையாலும் உலகில் எந்த நாடும் அடைய முடியாத நிலவின் தென் துருவத்தை அடைந்துள்ளதை போற்றும் வகையில் இந்நிகழ்வில் ஈடுபட்டனர்.

இந்நிகழ்வில் யோகா ஆசிரியர் குற்றாலம் குருகண்ணன், பெற்றோர் பொதுமக்கள் கலந்து கொண்டனர், இந்த சகோதரிகள் யோகாவில் உலகசாதனை புத்தகத்தில் இடம் பெற்றும் யோகா, ஸ்கேட்டிங் மூலம் பல சமூக விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## காரைக்காலில் ஐந்து வயது சிறுமிக்கு

# இலவசமாக இருதய சிகிச்சை செய்வதற்கு உதவி புரிந்த மாவட்ட ஆட்சியருக்கு சிறுமியின் பெற்றோர் நன்றி தெரிவித்தனர்



காரைக்கால், ஆக,30
காரைக்காலில் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் பொறுப்பேற்றதிலிருந்து கல்விக்கும் மருத்துவத்திற்கும் முக்கியத்துவம் அளித்து வரும் நிலையில் சில தினங்களுக்கு முன்பு ஸ்ரீ சங்கரா ஹார்ட் பவுண்டேஷன் மற்றும் ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவகல்லூரி உதவியுடன் காரைக்கால் அரசு பொது மருத்துவமனையில் இதய அறுவை சிகிச்சை முகாமை நடத்தினார்கள்.

இதன் ஒரு பகுதியாக காரைக்கால் மதகடியில் பூக்கடை வைத்து நடத்தும் காரைக்காலை சேர்ந்த சிலம்பரசனின் மகள் ஐந்து வயதான மித்ரா ஸ்ரீக்கு இரண்டு வயதில் இருந்து இதய நோய் இருந்து வந்துள்ளது.

இதனால் அந்த சிறுமி அடிக்கடி வாந்தி எடுப்பதும், உடல்நிலை சீராகஇல்லாமல்இருந்தும் வந்துள்ளார். காரைக்கால் பெரியபேட் தொடக்கப் பள்ளியில் ஒன்றாம் நிலை படித்து வரும் மித்ரா மாவட்ட நிர்வாகம் சில தினங்களுக்கு முன்பு ஏற்பாடு செய்திருந்த பொது மக்கள் குறைதீர்க்கும் முகாமில் செய்தி அறிந்து மாவட்ட ஆட்சியரை சந்தித்து கண்ணீர் மல்க உதவி கோரினார்கள்.

இதை பரிசீலித்த ஆட்சியர் உடனடியாக சென்னை ராமச்சந்திரா மருத்துவ கல்லூரியை தொடர்பு கொண்டு ஒப்புதல் பெற்று அந்த சிறுமையை உடனடியாக சென்னைக்கு அழைத்து சென்று மருத்துவமனையில் அனுமதித்தார்கள். அதன்படி ஆகஸ்ட் 18-ஆம் தேதி ராமச்சந்திர மருத்துவமனையில் சிறுமி அனுமதிக்கப்பட்டு அவருக்கு அறுவை சிகிச்சை இலவசமாக நடைபெற்றது.

பின்னர் இம்மாதம் 24-ஆம் தேதி மருத்துவமனையில் இருந்து சிறுமி வீட்டுக்கு அழைத்து வரப்பட்டாள். இதன் பொருட்டு குழந்தை மற்றும் பெற்றோர்கள் நேற்று வந்து மாவட்ட ஆட்சியரை சந்தித்து சால்வை அணிவித்து கண்ணீர் மல்க வாழ்த்து தெரிவித்தார். மேலும் மாவட்ட ஆட்சியர் குழந்தையை பத்திரமாக பார்த்துக் கொள்ளுமாறு பெற்றோரிடம் அறிவுறுத்தினார்.

# பிரதோஷ தினத்தில் உயிரிழந்த நந்தீஸ்வரர் காளை மாடு கைலாய வாத்தியம் முழங்க நான்கு மாட விதிகளிலும் வலம் வந்த பக்தர்கள்





திருவெற்றியூர், ஆக,30
திருவொற்றியூர் தியாகராஜ சுவாமி வடிவுடையம்மன் கோவிலில் நேர்ந்த விடப்பட்ட நாட்டு மாடு எனப்படும் காளை மாடு பார்ப்பதற்கு மிக உயரமாக பிரம்மாண்டமாக காட்சியளிக்கும் தியாகராஜரின் உற்சவம் ஒவ்வொன்றிலும் கைலாய வாத்தியம் முழங்கும் பொழுது யாருக்கும் எவ்வித இடையூரும் ஏற்படுத்தாமல் சுவாமிக்கு எதிராக நின்று அமைதியாக வணங்கி செல்லும் காட்சிகள் காண்போரை மெய்சிலிர்க்க வைக்கும்.

கோவிலுக்கு நேர்ந்து வொடப்பட்டதால் பல ஆண்டுகளாகவே கோவிலை சுற்றி சுற்றி வரும் காளைமாட்டை கடந்த வாரங்களுக்கு முன்பு மாநகராட்சி ஊழியர்கள் போராடி வலுக்கட்டாயமாக வாகனத்தில் ஏற்றி பெரம்பூரில் உள்ள கோசாலையில் அழைத்துச் சென்றனர்.

கடந்த ஐந்து நாட்களாக எவ்வித உணவு உட்கொள்ளாமல் மிகவும் சோர்வாக மாடு காணப்பட்டதால் கால்நடை மருத்துவர்கள் சிகிச்சை அளித்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில் கோவிலுக்குவரும்அன்றாட பக்தர்கள் நந்தீஸ்வரரை காணாமல் மாநகராட்சி அதிகாரிகளுக்கு கோரிக்கைவைத்து காளை மாட்டை எழுதி வாங்கி வாகனத்தில் அழைத்து வந்து இன்று மாலை கோவில் குளக்கரை அருகே இறக்கி விட்டனர் .

இதனையடுத்து கோவிலுக்கு எதிராகராஜ கோபுரத்தை பார்த்தபடி வணங்கி நின்ற நந்தீஸ்வரர் மாடு சரிந்து கீழே விழுந்து உயிரிழந்தது.

நந்தீஸ்வரர் மாடு உயிரிழந்த செய்தியை கேட்ட பக்தர்கள், பொதுமக்கள் வீடியோ எடுத்து சமூக வலைதளங்களில் பரப்பினர். இதனை அடுத்து நந்தீஸ்வரர் காளை மாடுக்கு திருவெற்றியூர் ஒண்ணாவது மண்டல குழு தலைவர் திமு தனியரசு மற்றும் பக்தர்கள் பொதுமக்கள் நேரில் வந்து மலர் மாலை அணிவித்து பூஜைகள் செய்து கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தினர்.

பிரதோஷ தினத்தில் நந்தீஸ்வரர் உயிரிழந்தது பக்தர்களை சோகத்தை ஏற்படுத்தியது இதனை அடுத்து ஜேசிபி இயந்திரம் மூலம் நந்தீஸ்வரர் மாடை மாட்டுவண்டியில் வைத்து கைலாய வாத்தியம் முழங்க திருவொற்றியூர் நான்கு மாத வீதிகளில் ஊர்வலமாக எடுத்துச் சென்றனர் பின்னர் இந்திரா நகர் பகுதியில் ஜேசிபி இயந்திரம் மூலம் பள்ளம் தோண்டப்பட்டு காளை மாட்டை நல்லடக்கம் அடக்கம் செய்த பின்னர் சிவன் அடியார்கள் சிறப்பு பூஜைகள் செய்து வழிபட்டனர். காளை மாடு உயிர்ழந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது




தருமபுரி கலெக்டர் அலுவலக கூடுதல் கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் கூட்டத்தில் கலெக்டர் சாந்தி பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார். உடன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (நிலம்) நசீர் இக்பால், மாவட்ட வழங்கல் அலுவலர் ஜெ.ஜெயக்குமார், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறும்பான்மையினர் நல அலுவலர் ராஜசேகரன், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் பி.எஸ்.கண்ணன், உதவி திட்ட அலுவலர் (வீடுகள்) தமிழரசன் உட்பட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.





கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டத்தில் மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப்பட உள்ளது. இது குறித்து சென்னை மாநகராட்சி கமிஷ்னர் ராதாகிருஷ்ணன் சென்னை கொடுங்கையீர் முத்தமிழ் நகர் வார்ட் 35மற்றும் தண்டையார்பேட்டை நேதாஜி நகர் வார்ட் 38 ல் நேரடியாக சென்று ஆய்வு செய்தார், உடன் வட சென்னை வட்டாரா துணை ஆணையர் சிவகுருபிரபாகரன், மண்டல அலுவலர் ராதாகிருஷ்ணன், செயற் பொறியாளர் ஹரிநாத், மற்றும் கள ஆய்வு பணியாளர்கள் வரி மதிப்பீட்டாளர்கள் ஜி.சீனிவாசன், ஸ்டாலின், இரிமம் ஆய்வாளர் ஆரோக்கிய ஜோஸப் ஆகியோர் உடன் உள்ளனர்.

# சந்திரயான்-3 வெற்றி நம்பமுடியாத ஒரு சாதனை உலக அழகி கரோலினா பிலாவ்ஸ்கா



புதுடெல்லி , ஆக.30-
சந்திரயான்-3 வெற்றி நம்பமுடியாத ஒரு சாதனை என்றும், இதற்காக இந்தியா மிகவும் பெருமைப்பட வேண்டும் என்றும் உலக அழகி கரோலினா பிலாவ்ஸ்கா தெரிவித்துள்ளார்.

ஜம்மு காஷ்மீர் தலைநகர் ஸ்ரீநகருக்கு வருகை தந்த அவர், பின்னர் புதுடெல்லி திரும்பி அங்கு செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது: "காஷ்மீருக்கு வந்தது மகிழ்ச்சியாக இருக்கிறது. காஷ்மீர் இந்த அளவு இயற்கை எழில் நிறைந்ததாக இருக்கும் என்று நான் நினைக்கவில்லை. காஷ்மீரின் இயற்கை அழகு என்னை ஆச்சரியப்பட வைத்துள்ளது. காஷ்மீரில் இயற்கைக் காட்சிகள் நிறைய இருக்கும் என எனக்குத் தெரியும். ஆனால், நான் பார்த்தது உண்மையில் மனதை கொள்ளை கொள்ள வைத்துள்ளது.

நிலவை ஆய்வு செய்வதற்காக இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான இஸ்ரோ நிலவுக்கு அனுப்பிய சந்திரயான்-3 விண்கலம் வெற்றிகரமாக தரையிறக்கப்பட்ட சம்பவம் நம்பமுடியாத ஒரு சாதனை. இதற்காக இந்தியா மிகவும் பெருமைப்பட வேண்டும். இதேபோல், இந்தியாவின் தலைமையின் கீழ் நடைபெற உள்ள ஜி20 உச்சிமாநாடு, ஒரு அற்புதமான வாய்ப்பு. உலகத் தலைவர்கள் இங்கு வந்து, காலநிலை மாற்றம் உள்பட நமது பூமியை பாதிக்கும் அனைத்துப் பிரச்சனைகள் குறித்தும் விவாதிக்க இருக்கிறார்கள். இதன்மூலம், நாம் சிறப்பாக என்ன செய்ய முடியும் என்பதை முடிவு செய்யலாம். நான் அதை எதிர்நோக்குகிறேன்.

பாலிவுட் படங்களில் பணியாற்ற விரும்புகிறேன். ஷாருக்கானின் படத்தில் நடிப்பது மிகவும் அருமையாக இருக்கும். இயக்குநர் சஜித் நதியத்வாலாவைச் சந்திக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. மேலும், அரண்மனைகள், இளவரசிகள் என அவர் தயாரிக்கும் திரைப்படங்களில் சஞ்சய் லீலா பன்சாலி உடன் பணியாற்றும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. கற்றுக்கொள்ளவும், பாலிவுட் சந்தை குறித்து தெரிந்து கொள்ளவும் முடிந்தால் அது எனக்கு ஒரு பெருமையாக இருக்கும்." இவ்வாறு உலக அழகி கரோலினா பிலாவ்ஸ்கா கூறினார்.

# 'யார் வெற்றி பெற்றிருந்தாலும் மகிழ்ச்சியே' தங்க மகனின் தாய் சரோஜ் தேவி சொன்ன அசத்தல் பதில்

புதுடெல்லி , ஆக.30-
மகனின் வெற்றி குறித்த பேசிய நீரஜ் சோப்ராவின் தாய், "இது மகிழ்ச்சிக்குரிய தருணம். யார் வெற்றி பெற்றிருந்தாலும் மகிழ்ச்சியே" என்று கூறி அனைவரின் இதயங்களையும் கவர்ந்துள்ளார்.

இந்தியாவின் தங்கமகனான நீரஜ் சோப்ரா நட்சத்திர வீரராக மட்டுமில்லை, அனைவராலும் விரும்பப்படும் வீரராகவும் மாறியிருக்கிறார். உலக சாம்பியன்ஷிப் தடகளப் போட்டியின் இறுதியில் அவர் பாகிஸ்தான் வீரர் அர்ஷத் நதீமுடன் போட்டியிட வேண்டி இருந்தது. விளையாட்டு உலகில் எந்த வகையான போட்டி என்றாலும் இந்தியா பாகிஸ்தான் போட்டி என வரும்போது ஒரு பரபரப்பு தொற்றிக்கொள்ளும். இந்தப் போட்டியிலும் அது இருந்தது. போட்டி முடிந்ததும், அர்ஷத் நதீம் தனக்கு விருப்பமான வீரர் என்றும், அவர் வெள்ளிப்பதக்கம் வென்றது தனக்கு மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது என்றும் தெரிவித்திருந்தார்.

2016-ல் நடைபெற்ற தெற்காசிய போட்டியிலும் நீரஜ் சோப்ரா, அர்ஷத் நதீமை வீழ்த்தி தங்கப் பதக்கம் வென்றிருந்தார். அப்போதிருந்து, இருவரும் ஒரு டஜன் நிகழ்வுகளில் ஒருவருக்கொருவர் போட்டியிட்டனர். எனினும் அனைத்துப் போட்டிகளிலும் நீரஜ் சோப்ரா வெற்றியுடன் திரும்பி உள்ளார். இதற்கு உலக தடகள சாம்பியன்ஷிப்பும் விதிவிலக்காக அமையவில்லை.

இதனிடையே, மகனின் வெற்றி குறித்து நீரஜ் சோப்ராவின் தாய் சரோஜ் தேவி செய்தியாளர்கள் சந்திப்பில் பேசியபோது, அவரது மகன் பாகிஸ்தான் வீரரை அவரது மகன் வீழ்த்தியிருப்பதை எப்படி உணர்கிறீர்கள் என்று கேட்கப்பட்டது. அதற்கு, வீரர்கள் எங்கிருந்து வந்தாலும் பரவாயில்லை என அவர் அளித்த பதில் பலரின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டுள்ளது.

நிருபரின் கேள்விக்கு பதில் அளித்த நீரஜின் தாயார், "இங்கே பாருங்கள் அனைவரும் களத்துக்கு விளையாடுவதற்காகவே வந்துள்ளோம். ஒருவர் இல்லையென்றால் மற்றொருவர் கட்டாயம் வெற்றி பெறுவார்கள். அதனால் வென்றவர் பாகிஸ்தானியரா, ஹரியாணாக்காரரா என்ற கேள்விக்கு



இடமில்லை. இது கொண்டாட்டத்துக்குரிய விஷயம். போட்டியில் பாகிஸ்தான் வெற்றி பெற்றிருந்தாலும் அது அதிக மகிழ்ச்சிக்குரிய விஷயம்தான்" என்று தெரிவித்திருந்தார்.

உலக தடகள சாம்பியன்ஷிப்பில் தங்கம் வென்ற முதல் இந்தியர் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனையை நீரஜ் சோப்ரா படைத்ததும், ஹங்கேரிய ரசிகை ஒருவர் அவரிடம் வந்து இந்திய தேசியக் கொடியில் நீரஜின் ஆட்டோகிராஃப் வேண்டும் என்று கேட்டுள்ளார். தேசியக் கொடியில் கையெழுத்திட மறுத்த சோப்ரா, அந்த ரசிகையை ஏமாற்ற மனமில்லாமல் அவரது டிஷர்ட்டின் வலது கையில் கையெழுத்திட்டுள்ளார். களத்தில் கலக்கியிருந்த நீரஜ் சோப்ராவின் இந்த செயல், களத்துக்கு வெளியேயும் அவர் பல இதயங்களை வெல்வதற்கு வழிவகுத்தது குறிப்பிடத்தகக்து.

போட்டி முடிந்ததும் ஊடகத்தினரிடம் உரையாடிய நீரஜ் சோப்ரா, நான் போட்டிக்கு முன் செல்போனை அதிகம் பயன்படுத்துவதில்லை. போட்டி முடிவடைந்து பார்க்கும்போது இந்தியா - பாகிஸ்தான் மோதல் என எல்லா இடங்களிலும் பார்த்தேன். நம் நாட்டில் எப்போதும் இந்த இந்தியா-பாகிஸ்தான் விஷயம் உள்ளது, அது போட்டிக்கு நல்லது, ஆனால் உலகளாவிய நிகழ்வுகளில் ஒவ்வொரு போட்டியாளரின் மீதும் கவனம் செலுத்த வேண்டும்.

நீங்கள் ஐரோப்பிய விளையாட்டு வீரர்களைப் பார்த்தால், அவர்கள் மிகவும் கடினமானவர்கள், அவர்கள் எந்த நேரத்திலும் எதையும் செய்ய முடியும். அர்ஷத் மட்டுமல்ல, ஜக்குப் வட்லெஜும் (செக் குடியரசின் வெண்கலம் வென்றவர்) சிறந்த வீரர். கடைசி வாய்ப்பு வரை ஒவ்வொரு வீரர் பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும்.

முன்பு ஐரோப்பியர்கள் அதிகளவில் ஈட்டி எறிதலில் சிறப்பாகச் செயல்பட்டனர், ஆனால் இப்போது நாங்கள் அவர்களை எதிர்த்துப் போட்டியிட்டு பதக்கம் வெல்வது நம் இரு நாடுகளுக்கும் நல்லது. மக்கள் இந்தியா-பாகிஸ்தான் போட்டியின் போது அழுத்தத்தை உருவாக்குவார்கள். ஆனால் எனது அணுகுமுறை 'எளிதாக இருங்கள், ஆரோக்கியமாக இருங்கள் மற்றும் உங்களை நம்புங்கள்' என்று கூறினார்.

உலக சாம்பியன்ஷிப்பில் தங்கம் வென்றதன் மூலம் அனைத்து வகையிலான பட்டங்களையும் வென்று தனது ஈட்டி எறிதல் வாழ்க்கையை முழுமை பெறச் செய்துள்ளார் நீரஜ்சோப்ரா. 2018-ல் ஆசிய விளையாட்டு, காமன்வெல்த் விளையாட்டு போட்டியில் தங்கம் வென்றார். டைமண்ட் லீக் தொடரில் 2022 மற்றும் 2023-ல் தலா 2 முறை பட்டம் வென்றார். கடந்த ஆண்டு டைமண்ட் லீக் சாம்பியன்ஸ் டிராபி தொடரிலும் வாகை சூடினார். 2016-ல் ஜூனியர் உலக சாம்பியன், 2017-ல் ஆசிய சாம்பியன்ஷிப் பட்டத்தையும் வென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.



கரூர் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் கூட்டத்தில் கலெக்டர் பிரபுசங்கர் பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளி பயனாளிகளிடம் கோரிக்கை மனுக்கள் பெற்று 99 பேருக்கு ரூ.67 லட்சம் மதிப்பீட்டில் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். மேலும், கூட்டத்தில் ஓய்வூதியம், வங்கிகடன், இலவச வீட்டுமனைப்பட்டா, போன்றவைகள் கேட்டு மொத்தம் 531 மனுக்கள் பெறப்பட்டது. இதில் மாற்றுத்திறனாளிகளிடம் 47 மனுக்கள் பெறப்பட்டது.

# புதுக்கோட்டை சுதர்சன் பாலிடெக்னிக் கல்லூரியில் மூன்று நாட்கள் கருத்தரங்கம்



புதுக்கோட்டை, ஆக.30–

புதுக்கோட்டை மாவட்டம் சத்தியமங்கலம், சுதர்சன் பாலிடெக்னிக் கல்லூரியில் "தொழில்துறை தேவைகளுக்கு அறிவியல் மற்றும் தொழில் நுட்ப திறன் மேம்பாடு" என்ற தலைப்பில் மூன்று நாட்கள் கருத்தரங்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. துவக்க நாளான நேற்று சுதர்சன் கல்விக் குழுமத் தலைவர் மு.விஜய்குமார் தலைமை தாங்கி மாணவர்களுக்கு இதற்கானமுக்கியத்துவத்தை எடுத்துக்கூறினார்.

இதில்ஆர்மணிகண்டன் மென்பொருள்பொறியாளர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு தொழில் நுட்பத்தேவைகள் மற்றும் செயற்கை நுண்ணறிவு) பற்றிய முக்கியத்துவம் பற்றி மாணவர்களுக்கு எடுத்துரைத்தார். மேலும் மாணவர்கள் நேர்முகத் தேர்வினை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் எனக் கூறினார்.

சென்னை தொழில்நுட்பக் கல்வி இயக்குனரகத்தின்சார்பாக வருகை புரிந்த அறிவியல் அலுவலர் மோகன்ராஜ் கலந்துகொண்டனர் இந்த கருத்தரங்கின் நோக்கங்களை எடுத்துரைத்தார். முன்னதாககருத்தரங்கிற்கு வந்திருந்த அனைவரையும் பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் கலியபெருமாள் வரவேற்றுப் பேசினார். இதில் புதுக்கோட்டை மாவட்ட அளவிலான 11 தொழில் நுட்பக் கல்லூரி மாணவ, மாணவிகள் 141 பேர் கலந்துகொண்டனர், இந்நிகழ்ச்சியைமின்னியல் துறைத்தலைவர் விஜயக்குமார் ஒருங்கிணைத்தார்.

# மதுரையில் திமுகவை கண்டித்து பாஜக ஆர்ப்பாட்டம்



மதுரை,ஆக.30–

மதுரையில் திமுக அரசை கண்டித்து மாநகர் மாவட்ட பாஜக சார்பில் நடைபெற்றது. மதுரை மாநகர் மாவட்ட பாஜக மகளிரணி, இளைஞரணி மற்றும் கூட்டுறவு பிரிவு சார்பில் ஆட்சியர் அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.. மாநகர் மாவட்டத் தலைவர் மகா. சுசீந்திரன் தலைமை தாங்கினார்.

மாவட்ட பொது செயலாளர்கள் ராஜ்குமார், பாலகிருஷ்ணன் முன்னிலை வகித்தனர். மகளிரணி தலைவர் மீனா, இளைஞரணித் தலைவர் பாரிராஜா, கூட்டுறவு பிரிவுத் தலைவர் செந்தில் வேல் ஆகியோர் வரவேற்றனர். ஆர்பாட்டத்தில் மதுரை நகரில் ரேஷன் பொருட்கள் கடத்தலை தடுக்க வேண்டும்.. அனைத்து துறைகளிலும் நடைபெறுகின்ற ஊழலை தடுத்து நிறுத்த வேண்டும் என்பது போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பபட்டது.

ஆர்ப்பாட்டத்தில் கூட்டுறவு பிரிவு மாநில செயலாளர் பாஸ்கரன், மேற்கு மாவட்ட பார்வையாளர் ராஜரத்தினம், மாவட்ட துணைத்தலைவர் வினோத்குமார், ஊடகப்பிரிவு தலைவர் ரவிச்சந்திரபாண்டியன், காலவாசல் மண்டலத்தலைவர் பிச்சைவேல், மாநகர் மாவட்ட இளைஞர் அணி தலைவர் பாரிராஜா, இளைஞர் அணி நர்வாகிகள் காசிராஜன், கணேசன், ஸ்ரீகாந், கவுதம், விருந்தோம்பல் கிருஷ்ணன், வெளிநாட்டு மற்றும் அன்டை மாநில தமிழ் வளர்ச்சி பிரிவு மாவட்ட தலைவர் சிவக்குமார்,இன்பராணி செல்வம்,போதிலெட்சுமி உள்பட ஏராளமான கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்..

# உடையார்பாளையம் அருகே எம்,ஆர் கல்லூரியில் பாரம்பரிய சிறுதானிய உணவுத் திருவிழா



அரியலூர்,ஆக.30–

உடையார்பாளையம் அருகே எம்.ஆர் கல்லூரியில் பாரம்பரிய சிறுதானிய உணவு திருவிழா நடைபெற்றது.

அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் அருகே உள்ள, தத்தனூர் மீனாட்சி இராமசாமி கல்வி நிறுவனங்களின் சார்பாக, பாரம்பரிய சிறுதானிய உணவுத் திருவிழா நடைப்பெற்றது. இதில் 400 க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள், சிறுதானிய உணவு பொருட்களை கொண்டு காட்சிபடுத்தினார்கள். நிகழ்ச்சிக்கு எம் ஆர் சி கல்வி நிறுவனங்களின் தாளாளர் எம்.ஆர். இரகுநாதன் தலைமை வகித்தார், இயக்குநர் இராஜமாணிக்கம், கல்லூரி முதல்வர் சேகர், துணை முதல்வர் சங்கீதா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கண்காட்சியில் வரகு, கேழ்வரகு, கம்பு, சாமை, சோளம், குதிரை வாலி, திணை, கொள்ளு, சோளம் உள்ளிட்ட பல தானியங்களைக்கொண்டு கம்பு கொழுக்கட்டை, கருப்பு கவுனி அரிசி இனிப்பு பொங்கல், கருப்பு கவுனி இலட்டு, காராமணி, குதிரை வாலி கஞ்சி., கேழ்வரகு அடை, கேழ்வரகு அப்பம், கொள்ளு சாதம், கொள்ளு சுண்டல், சாமை பொங்கல், சாமை லட்டு, சிவப்பு அரிசி பாயாசம், தட்டைபயிறு அவியல், திணை அரிசி அல்வா முதலிய சுமார் 400க்கும் மேற்பட்ட பல்வேறு விதமான உணவு வகைகள் தயாரித்து வைக்கப்பட்டு, அனைவருக்கும் வழங்கப்பட்டது.

இக்கண்காட்சியில் இருபால் பேராசிரியர்கள், மாணவ, மாணவியர்கள் மற்றும் பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டு, நமது பாரம்பரிய சிறுதானிய உணவு வகைகளையும் அதன் முக்கியத்துவத்தையும் தெரிந்து கொண்டனர், நிகழ்ச்சிக்கு தேவையான ஏற்பாடுகளை பேராசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் செய்திருந்தனர்.

# தென்காசி மாவட்டத்தில் திமுக மாவட்ட செயற்குழு கூட்டம்



தென்காசி,ஆக.30–

தென்காசி மாவட்டம் தென்காசிஇசக்கிமகாலில் திமுகமாவட்டசெயற்குழு கூட்டத்தில் முதல்வர்மு.க. ஸ்டாலினுக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது, தென்காசி ஒருங்கிணைந்த மாவட்ட செயற்குழு கூட்டத்தில் வருகிற செப்டம்பர் 5–ஆம் தேதி தென்காசி மாவட்டத்திற்கு வருகை தரும் இளைஞர் நலன் மற்றும் மேம்பாட்டு விளையாட்டுதுறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொள்ளும் நிகழ்ச்சி ஏற்பாடுகள் பற்றி ஆலோசனை வழங்கினார்.

கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே. கே. எஸ். எஸ்.ஆர். ராமச்சந்திரன் கலந்துகொண்டு முன்னேற்பாடுகளை செய்தனர், பெண்களின் உரிமை தொகை கிடைத்திட நடவடிக்கை எடுத்த முதல்வர் ஸ்டாலினுக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும் திமுக கழக மூத்த முன்னோடிகள் 1000 பேருக்கு பொற்களி வழங்க ஏற்பாடு செய்து வருகின்றனர் விழா நடக்கும் இடத்தை அமைச்சர், தெற்கு மாவட்ட செயலாளர் வே.ஜெயபாலன், வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா, தென்காசிஎம். பி தனுஷ் எம். குமார், நகர் மன்றத் தலைவர் சாதிர், முன்னாள் மாவட்டச்செயலாளரும், தலைமை செயற்குழு உறுப்பினருமானமா. செல்லத்துரை, இளைஞர் அணி அமைப்பாளர் கிருஷ்ணராஜா, வடக்கு மாவட்டம் இளைஞர் அணி அமைப்பாளர் முகேஷ், முன்னாள் அமைச்சர் தங்கவேலு, முன்னாள் எம்எல்ஏ முத்துச்செல்வி, மாவட்ட பொருளாளர் சரவணன், தெற்கு மாவட்ட பொருளாளர் செரீப், மாவட்டத் துணைச் செயலாளர் கனிமொழி, அவைத்தலைவர் சுந்தர மகாலிங்கம், அழகு சுந்தரம், கடையநல்லூர் ஒன்றிய செயலாளர் பா. சுரேஷ், நகர செயலாளர் எஸ். அப்பாஸ், சாம்பவர் வடகரை மாறன், சுற்றுச்சூழல் அணி தலைவர் விஜயா பாண்டியன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் யு.எஸ்.டி. சீனிவாசன், பெரியதுரை, கருப்பணன், வேலுச்சாமி, ஹக்கீம், குற்றாலம் எ.சுரேஷ், மஜித், இசக்கி பாண்டியன், மூப்பன் ஹபீபூர் ரஹ்மான், துணைச் சேர்மன் ஐவேந்திரன் தினேஷ், ஆ. மணிகண்டன், மைதீன் ஒலி, ராஜ், காளிமுத்து, நல்லையா மற்றும் திமுக கட்சி மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### திருமயம் குறுவட்ட அளவிலான குழு போட்டியில்

# இராமநாதன் செட்டியார் பள்ளி மாணவ, மாணவிகள் சாதனை



திருமயம்,ஆக.30–

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் குறுவட்ட அளவிலான குழு விளையாட்டு போட்டி 7.8.2023 முதல் 21.08.2023 வரை வார்ப்பட்டில் நடைபெற்றது இதில் நச்சாந்துபட்டி இராமநாதன் செட்டியார் மேல்நிலைப்பள்ளி மாணவ,மாணவிகள் குழு போட்டியில் ஜீனியர், சீனியர் சூப்பர்சீனியர் என பல பிரிவுகளில் கலந்துகொண்டனர்.

ஜீனியர் பிரிவில் மாணவர்கள் கால்பந்து போட்டியிலும் மாணவிகள் ஏறிபந்து, கடற்கரை கையுந்து பந்து, மேஜை பந்து ஒற்றையர் மற்றும் இரட்டையர் பிரிவில் முதலிடம், சீனியர் பிரிவில் மாணவிகள் ஏறிபந்து போட்டியில் முதலிடம் பெற்றனர். சூப்பர் சீனியர் பிரிவில் மாணவர்கள் கால்பந்து, வலையபந்து ஒற்றையர் மற்றும் இரட்டையர் வலைபந்து, பூபந்து, சதுரங்கம் மற்றும் எறிபந்து போட்டிகளில்; முதலிடம் பெற்றுள்ளனர், 15 போட்டிகளில், முதலிடத்தையும் 12 போட்டிகளில், இரண்டாம் இடத்தையும் பெற்று பள்ளிக்கு பெருமை சேர்த்த மாணவ, மாணவிகளை பள்ளிச் செயலர் கு. இராமநாதன், தலைமை ஆசிரியர் ந.கணேசன் உடற்கல்வி இயக்குநர் இராக்கேஷ், உடற்கல்வி ஆசிரியாகள், மங்கையற்கரசி சண்முகவடிவேல் மற்றும் ஆசிரியர்கள் பாராட்டி வாழ்த்து தெரிவித்தனர்.



▶ மாவட்ட பள்ளிக்கல்வித் துறையும் சமூக நலத்துறையும் இணைந்து நடத்திய மாவட்ட அளவிலான கண்காட்சியில் கலந்து கொண்டு உணவே மருந்து என்ற பிரிவில் பாரம்பரிய உணவு வகைகளை காட்சிப்படுத்திய ஆவுடையார்கோவில் அரசு மேல்நிலைப் பள்ளி மாணவி அபிநயா, மாவட்ட அளவில் முதலிடம் பிடித்தார். அவர்களுக்கு மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் பாராட்டு சான்றிதழும் முதல் பரிசும் (டிராவல் பேக்) வழங்கி சிறப்பித்தார், மாணவி அபிநயாவிற்கு பள்ளித் தலைமையாசிரியர் தாமரைச்செல்வன், உதவி தலைமை ஆசிரியர் ஸ்டாலின் உள்ளிட்ட அனைத்து ஆசிரியர் பெருமக்களுக்கும், பள்ளி மேலாண்மை குழு தலைவி கவிதா உள்ளிட்ட அனைத்து உறுப்பினர்களும் வாழ்த்துக்கள் தெரிவித்தனர். வெற்றிக்கு உறுதுணையாக இருந்த வழிகாட்டி ஆசிரியர்கள், ஸ்டாலின், பத்மாவதி,ரதிதேவி செந்தில்குமார் புவனேஸ்வரி, ராஜேந்திரன் உள்ளிட்ட அனைத்து ஆசிரியர் பெருமக்களுக்கும் தலைமை ஆசிரியர் நன்றி தெரிவித்தார், மேலும் பள்ளி அளவில் நடைபெற்ற அறிவியல் கண்காட்சியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும்,பங்கு பெற்ற மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

# கைக்குறிச்சி ஸ்ரீ பாரதி கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியில் ஓணம் பண்டிகை கொண்டாட்டம்



திருவரங்குளம் ஆக–30

கைக்குறிச்சி ஸ்ரீ பாரதி கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியில் ஓணம் பண்டிகை கொண்டாட்டம் மிகச்சிறப்பாக நேற்று நடைபெற்றது. விழாவிற்கு ஸ்ரீ பாரதி கல்வி நிறுவனங்களின் தலைவர் குரு.தனசேகரன் தலைமை தாங்கினார், தாளாளர் ஏ.லியோ பெலிக்ஸ் லூயிஸ், நிர்வாக அறங்காவலர் அ.கிருஷ்ணமூர்த்தி, இயக்கநர் மா.குமுதா ஆகியோர் முன்னிலை வகித்தனர், விழாவினை கல்லூரியின் முதல்வர் செ.கவிதா தொடங்கிவைத்தார்.

பின்னர் அனைத்து துறை மாணவிகளும் ஒன்று சேர்ந்து அத்தப்பூ கோலம் வரைந்தும், ஆடிப்பாடியும் மகிழ்ந்தனர், கேரளா மாநிலத்தில் இருந்து படிக்கும் மாணவிகள் மலையாளத்தில் தங்களுடைய பண்டிகையை எடுத்துரைத்துனர், நிகழ்ச்சியின் முன்னதாக மக்கள் கவிஞர் மு.பாலசுப்பிரமணியன் வரவேற்றார், முடிவில் ஆடை வடிமைப்பியல் துறைத்தலைவர் கி.பரணி நன்றி கூறினார்.

### ஆவுடையார்கோவில் அருகே பூவலூர் ஊராட்சியில்

# குடிதண்ணீர் பைப் போடுவதைதடுப்பவர்கள் மீது நடவடிக்கை வேண்டி திடீர் சாலை மறியல்



ஆவுடையார்கோவில், ஆக.30–

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் தாலுகா பூவலூர்கிராமத்தில் கடந்த 10 ஆண்டுகளாக குடிதண்ணீர் தட்டுப்பாடு இருந்து வருகிறது, இந்நிலையில் ஆவுடையார்கோவில் சேர்மன் உமாதேவி முயற்சியில் சுமார் 30 லட்சம் மதிப்பில் ஆழ்குழாய்கிணறுபூவலூர் ஊராட்சியில் மாவடி கோட்டை கிராமத்தில் அமைக்கப்பட்டு அங்கிருந்து சுமார் 2கிலோ மீட்டர்தூரமுள்ளபூவலூர் தலித் குடியிருப்புக்கு குடிநீர்பைப்புஇணைக்கும் நிகழ்ச்சி பூவலூர் ஊராட்சியில்நடந்து வருகிறது ஊரில் உள்ள அனைத்து குடியிருப்புகளுக்கும் குடிநீர் குழாய் இணைப்பு கொடுக்கப்பட்டநிலையில் தலித் மக்கள் வாழுகின்ற பகுதிக்கு சுமார் 800 மீட்டர் தூரத்திற்கு குடிநீர் குழாய் பறிக்கும் வேலை நடந்து கொண்டு இருக்கையில் ஒரு சிலர் நேற்று காலை குடிநீர் குழாய் பதிக்கும் ஜேசிபி எந்திரத்தை தாக்கி பிரச்சனை செய்ததால் தலித் குடியிருப்பை சேர்ந்த 30–க்கும் மேற்பட்ட மக்கள் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட செயலாளர் தமிழ்ச்செல்வன் ஆவுடையார்கோவில் வீசிகபொறுப்பாளர் காத்த முத்து மீனவர் பேரவை மாவட்ட செயலாளர் பீட்டர் வளவன் மீன் பூவலூர் முகாம் செயலாளர் பாண்டி உட்பட 30க்கும் மேற்பட்டோர் திடீர் சாலை மறியலில் ஆவுடையார்கோவில் டு பெருமருதூர் சாலைகள் அமர்ந்து சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தார்கள்.

அங்கு வந்த நாகுடி மற்றும் ஆவுடையார்கோவில் காவல்துறையினர் மற்றும் ஆவுடையார்கோவில் பிடிஓசீனிவாசன் ஆகியோர் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர் இதில் ஆவுடையார்கோவில் தாசில்தார் மார்ட்டின் லூதர் கிங் தலைமையில் பேச்சுவார்த்தை நடத்தி பிறகுகுடிநீர்பைப்பதிக்கும் நிகழ்வு நடத்தப்படும் என அதிகாரிகள் அறிவித்துள்ளதால் தற்சமயம் போராட்டம் நிறுத்தப்பட்டுள்ளது, இந்த நிகழ்ச்சியால் ஆவுடையார்கோவில் டு பெருமருதூர் சாலையில் சுமார் 2 மணி நேரம் போக்குவரத்து பாதிப்புக்கு உள்ளானது.

# ஆலங்குடி அருகே கணவன் மனைவி தற்கொலை





ஆலங்குடி,ஆக.30–

ஆலங்குடி அருகே கணவன், மனைவி தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டது குறித்து போலீஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகேயுள்ள திருவரங்குளம் நிம்பனேஸ்வரத்தைச் சேர்ந்த கருப்பையா மகன் பொற்பனையான்(30), இவருக்கும் கல்யாணபுரத்தைச் சேர்ந்த நாதன் மகள் பிரியங்கா(23) என்பவருக்கும் 1 ஆண்டுக்கு முன்பு திருமணம் நடைபெற்றுள்ளது. குழந்தை இல்லை என பொற்பனையான் பிரியங்காவிடம் மதுபோதையில் அடிக்கடி தகராறில் ஈடுபட்டு வந்தாராம்.

இதேபோல், சம்பவத்தன்று பிரியங்காவிடம் தகறாறு செய்ததாகக் கூறப்படுகிறது. இதில், விரக்தியடைந்த பிரியங்கா வீட்டில் சேலையால் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார். இதைப்பார்த்த பொற்பனையானும் மற்றொரு அறையில் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டதாகக் கூறப்படுகிறது. இதுகுறித்து அருகில் இருந்தவர்கள் அளித்த தகவலைத்தொடர்ந்து, அங்கு சென்ற ஆலங்குடி போலிஸார் இருவரது உடலையும் மீட்டு புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்து, இருவரது இறப்பு குறித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# தேசிய விளையாட்டுத்தினத்தையொட்டி காரைக்கால் விநாயகா மிஷன்ஸ் மருத்துவக்கல்லூரி சார்பில் இறகு பந்து போட்டி



காரைக்கால், ஆக.30–

தேசிய விளையாட்டுத்தினத்தையொட்டி, காரைக்கால் விநாயகா மிஷன்ஸ் மருத்துவக்கல்லூரி சார்பில், நேற்று இறகு பந்து போட்டி சிறப்பாக நடைபெற்றது. தேசிய விளையாட்டுத்தினத்தையொட்டி, காரைக்கால் விநாயகா மிஷன்ஸ் மருத்துவக்கல்லூரி சார்பில், காரைக்கால் பேரடைல் உள் விளையாட்டு அரங்கில், நேற்று இறகுபந்துபோட்டி சிறப்பாக துவங்கியது.

வரும் செப்டம்பர் 4ந் தேதி வரை நடைபெறும் இப்போட்டியில், ஒற்றையர் பிரிவு, இரட்டையர் பிரிவு, கலப்பு இரட்டையர் பிரிவு என 3 பிரிவுகளின் கீழ், ஆண், பெண் என தனித்தனியே போட்டிகள் நடைபெறுகிறது. ஆண்கள் பிரிவு அனைத்தும் நாக் அவுட் முறையிலும், பெண்கள் பிரிவு போட்டிகள் லீக் முறையிலும் நடைபெறும். போட்டியின் இறுதிநாளில், வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிப்பு விழா நடைபெறும் என, கல்லூரி முதுநிலை உடற்கல்வி இயக்குனர் ஜான்சன்ராஜ்ரமேஷ் தெரிவித்துள்ளார்.

PUDUGAI VARALARU – National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

# வீட்டு உபயோக சிலிண்டர் விலை ரூபாய் 200 குறைப்பு: விநியோகஸ்தர்கள் அதிருப்தி





# சொத்து குவிப்பு வழக்கு: புதுகை நீதிமன்றத்தில் விஜயபாஸ்கர் மனைவியுடன் ஆஜர்

# காவிரி ஒழுங்காற்று குழு உத்தரவு தண்ணீர் திறக்க கர்நாடகா மறுப்பு





| சென்னை / புதுக்கோட்டை | 30.08.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை வரலாறு நாளிதழ்

புதிய
# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்



கோவிந்த் வல்லப் பந்த் , உத்தரப் பிரதேசத்தின் 1வது முதலமைச்சர் (பி.1887) (இ.1961)



டி. கே. எஸ். இளங்கோவன் , தமிழக அரசியல்வாதி (பி.1954)



இரவி சங்கர் பிரசாத் ,இந்திய அரசியல்வாதி (பி.1954)

## இன்றைய நினைவு நாள்



தோரு தத் , இந்தியக் கவிஞர், எழுத்தாளர் (பி.1856) (இ.1877)



கே. வி. எஸ். வாஸ் , இலங்கைப் பத்திரிகையாளர், எழுத்தாளர் (பி.1912) (இ.1988)



ஜி. கே. மூப்பனார் , தமிழக அரசியல்வாதி (பி.1931) (இ.2001)

## அனைத்துலக காணாமற்போனோர் நாள்